SRI LANKA CERT | CC

# Sri Lanka Computer Emergency Readiness Team | Coordination Centre

## இலங்கை CERT இல் வெற்றிடம்

### *தலைமை நிறைவேற்று அதிகாரி*

2026 இல் நிறுவப்பட்ட, இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவானது (Sri Lanka CERT) இலங்கையின் தேசிய CERT என்பதோடு டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகிறது.

இணைய பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தடுப்பது, கண்டறிவது மற்றும் தீர்வு காண்பது தொடர்பான நாட்டின் முதன்மை தேசிய நிறுவனமாக இலங்கை CERT செயல்படுவதை உறுதிசெய்யும் வகையில், அதன் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) நிர்வாகப் பொறுப்புகளை மேற்கொண்டு, வழிகாட்டுதலும் சிந்தனைத் தலைமைத்துவத்தையும் வழங்கி, தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி, தேவையான அனைத்து பணிகளையும் நிறைவேற்றுபவராக உள்ளார்.

### *முக்கிய பொறுப்பகள் மற்றும் கடமைகள்*

- பணிப்பாளர் சபையால் நிர்ணயிக்கப்பட்ட மூலோபாய வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாவார்.
- CERT அணிக்கு மூலோபாயத் தலைமையை வழங்கி, நிறுவனத்தின் இணையப் பாதுகாப்பு முயற்சிகளுக்கான ஒட்டுமொத்த வழிகாட்டல், தொலைநோக்குப் பார்வை மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல்.
- CERT-இன் அன்றாட செயற்பாடுகளை மேற்பார்வையிட்டு, வளங்கள் மற்றும் வரவு - செலவுத் திட்டத்தை நிர்வகித்தல், மேலும் இணையப் பாதுகாப்பு சம்பவங்களுக்கு திறம்படப் பதிலளிப்பதற்காக மனிதவளத்தையும் தொழில்நுட்ப வளங்களையும் பயனுள்ள முறையில் கையாள்வதை உறுதிப்படுத்துதல்.
- தரவுக் கசிவுகள், Malware மற்றும் இணையத் தாக்குதல்கள் போன்ற இணையப் பாதுகாப்புச் சம்பவங்களை திறம்படக் கண்டறிய, பகுப்பாய்வு செய்ய மற்றும் அவற்றிற்கு உரிய பதிலளிப்பை மேற்கொள்ள சம்பவப் பதிலளிப்பு திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாவார்.
- உள்நாட்டு அணிகளுடனும், அரச நிறுவனங்கள், சட்ட அமுலாக்கல் அமைப்புகள், தொழில்துறைப் பங்காளிகள் மற்றும் ஏனைய CERT அமைப்புகள் உள்ளிட்ட வெளிப்புற பங்குதாரர்களுடனும் நெருக்கமாக இணைந்து, இணையப் பாதுகாப்பு சம்பவங்களுக்கான ஒருங்கிணைந்த பதிலளிப்பை மேற்கொள்வதோடு, Threat Intelligence இனை பகிர்ந்து கொள்ளுதல்.
- இணையப் பாதுகாப்பு அபாயங்களை மதிப்பீடு செய்து, அவற்றைக் குறைப்பதற்கான உத்திகளை உருவாக்குதல் இதில் பாதுகாப்புக்கான சிறந்த நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல், அபாய மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் முக்கியமான சொத்துகள் மற்றும் தரவுகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை செயல்படுத்தல் ஆகியவை அடங்கும்.
- சட்ட மற்றும் ஒழுங்குமுறை அணிகளுடன் இணைந்து, பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் தொழில்துறைத் தரநிலைகளுக்கு இணங்கும் இணையப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குதல்.
- பணியாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு இணையப் பாதுகாப்புக்கான சிறந்த நடைமுறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் சம்பவங்களுக்கு எவ்வாறு திறம்படப் பதிலளிப்பது என்பது குறித்து விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.
- CERT இன் பிரதான பேச்சாளராகச் செயல்பட்டு, இணையப் பாதுகாப்பு சம்பவங்கள், அவற்றிற்கான பதிலளிப்பு நடவடிக்கைகள் மற்றும் தணிப்பு உத்திகள் குறித்து சிரேஷ்ட நிர்வாகம், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளுதல்.
- CERT அமைப்பில் தொடர்ச்சியான முன்னேற்றக் கலாசாரத்தை உருவாக்கி, மாறிவரும் இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் நிறுவனத் தேவைகளுக்கு ஏற்ப சம்பவப் பதிலளிப்புத் திட்டங்கள், நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை தவறாமல் மீளாய்வு செய்து புதுப்பித்தல்.
- இலங்கை CERT இன் வழிகாட்டுதல்களுக்கு இணங்க அரசு மற்றும் ஏனைய பங்குதாரர்களுடனான தொடர்பாடல்களை நிர்வகித்தல்.
- உருவாகிவரும் புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தேவையான மாற்றங்களுடன் தேசிய இணையப் பாதுகாப்பு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்று, தேசிய இணையப் பாதுகாப்பு செயற்றிட்டத்தை முன்னெடுப்பதில் அரசின் சிரேஷ்ட பங்குதாரர்களை வழிநடத்தி செல்வாக்கு செலுத்துதல்.
- Threat Intelligence மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதற்காக சர்வதேச பாதுகாப்பு வலையமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, கூட்டாண்மைகளை உருவாக்குதல்.
- செயற்பாட்டு நோக்கமுடைய பண்பாட்டை உருவாக்கி, எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதையும், பொருத்தமான பணியாளர் ஈடுபாட்டின் மூலம் நேர்மறை மற்றும் ஊக்கமிக்க பணியாளர்களைக் கொண்ட பணிச்சூழலை உறுதிப்படுத்துவதையும் முன்னெடுத்தல்.
- துறைசார் மற்றும் நிறுவன மட்ட கணினி பாதுகாப்புச் சம்பவப் பதிலளிப்பு அணிகள் அமைக்கப்படுவதற்கு வழிகாட்டுதல், ஊக்குவித்தல் மற்றும் உதவுதல்.
- ஆசிய பசுபிக் CERT மற்றும் ஏனைய நாடுகளின் தேசிய CERT அமைப்புகளுக்கான தேசிய தொடர்பு மையமாக தொடர்ந்து செயல்படுவதன் மூலம், உலகளாவிய மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்.

### *தகைமைகள் மற்றும் அனுபவம்:*

- இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட, உள்நாடு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட தகவல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்ப, கணினி விஞ்ஞானம், கணினி பொறியியல், தகவல் தொழில்நுட்பம் அல்லது பதவிக்கு தொடர்புடைய வேறு துறை ஒன்றில் இளமாணி பட்டம் (SLQF 5 அல்லது 6).

**மற்றும்**

- இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட, உள்நாடு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கணினி விஞ்ஞானம், தகவல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, கணினி பொறியியல், தகவல் தொழில்நுட்பம் அல்லது பதவிக்கு தொடர்புடைய வேறு துறை ஒன்றில் பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணி) (SLQF 9 அல்லது அதற்கு மேல்) அல்லது தகவல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, கணினி விஞ்ஞானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் இணை/ சக அங்கத்துவம்.

**அத்துடன்**

- முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் ஒரு புகழ்பெற்ற தனியார் துறை இணையப் பாதுகாப்புச் சேவை வழங்குநர், பொது கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை, முழுமையான அரசுக்குச் சொந்தமான நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் மூலோபாயப் பிரச்சினைகளைக் கையாண்டதற்கான சான்றுகளுடன் கூடிய வெற்றிகரமான கொள்கைத் தலைமைத்துவத்துடன் தகவல் அல்லது சைபர் பாதுகாப்புத் துறையில் 14 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொழில்துறை அனுபவம் மற்றும் அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமையாளர் பதவி ஒன்றில் இருத்தல் வேண்டும்.

### *பல்வேறு திறன்களில் பின்வருவன அடங்குதல் வேண்டும்:*

- அரசாங்க அதிகாரிகள், தொழில்துறை முன்னணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் திறம்பட இணைந்து செயல்படும் திறன்.
- மூலோபாயத் திட்டமிடல் மற்றும் அவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய அனுபவம்.
- இணையப் பாதுகாப்புக் கோட்பாடுகள், நடைமுறைகள் மற்றும் உலகளாவிய இணைய அச்சுறுத்தல் சூழல் குறித்த ஆழமான புரிதல்.
- சிறந்த தலைமைத்துவம், நிறுவன முகாமைத்துவம் மற்றும் முடிவெடுக்கும் திறன்கள்.
- சிறந்த தொடர்பாடல் மற்றும் மனித உறவுத் திறன்கள்.
- நிதி முகாமைத்துவத்தில் சிறந்த தேர்ச்சி மற்றும் வரவு - செலவுத் திட்டங்கள் மற்றும் நிதி வளங்களை நிர்வகித்த அனுபவம்.
- உயர்ந்த ஒழுக்க நெறிகள் மற்றும் நேர்மை.

### *மற்ற பொதுவான தகைமைகள்*

**அபேட்சகர்கள் பின்வரும் பொதுவான தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:**

- 40 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்கு உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
- உயர்மட்ட தேசிய நிறுவனங்கள், சர்வதேச முகவர்கள் மற்றும் வெளிநாடுகளின் மற்ற நிறுவனங்களுடன் தொடர்புகளுக்கான ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழிகளில் சிறந்த புலமை இருத்தல் வேண்டும்.
- தகவல் பாதுகாப்புடன் தொடர்புடைய உலகளாவிய தகவல் தொழில்நுட்பப் போக்குகள், இணையப் பாதுகாப்புத் துறையின் அண்மைய முன்னேற்றங்கள், டிஜிட்டல் மயமாக்கலை பிரதான நீரோட்டத்தில் கொண்டு வருவதற்கான தேசிய முன்னுரிமைகள் மற்றும் தொடர்புடைய அறிவு ஆகியவற்றில் பரிச்சயம் பெற்றிருப்பது மேலதிக சாதகமாக அமையும்.

சம்பளம் தற்போதைய தொழில்துறை தரங்களின் அடிப்படையில் அமைவதோடு பல்வேறு வெளிநாட்டு பயணம் மற்றும் தொழில் வாழ்வை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளுக்கு மேலதிகமாக போக்குவரத்து கொடுப்பனவுகளும் உள்ளடங்கும்.

"தலைமை நிறைவேற்று அதிகாரி" என்ற இந்த பதவி நிலைக்காக நீங்கள் பொருத்தமான அபேட்சகர் என்பதில் உங்களுக்கு உறுதியாக இருந்தால், அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று மற்றும் இரு உறவினர் அல்லாத நடுவர்களின் விபரங்களுடன் 2026 ஜுலை 27ஆம் திகதி அல்லது அதற்கு முன் உங்களது சுயவிபரத்தை careers@cert.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட அபேட்சகர்களுக்கு அறிவுறுத்தப்படும்.


**தலைவர்**<br>
**இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு**<br>
**அறை 4-112, BMICH, பௌத்தாலோக்க மாவத்தை,**<br>
**கொழும்பு 00700**

**தொ.: 011 2691692/ 011 2679888**